நிலமாற்றம் – வேலூர் மாவட்டம் – திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மதுரா அத்தனாவூர், கிராமம் – சர்வே எண். 474, தீர்வை ஏற்படாத தரிசு – விஸ்தீரணம் 32.97.5 ஹெக்டேர் (அல்லது) 81.45 ஏக்கர் நிலத்தை தாவரவியல் பூங்கா அமைக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு நிலமாற்றம் செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய் [நிமு–4(1)] துறை</u>

<u>அரசாணை (நிலை) எண் 161</u> <u>நாள் 01.04.2010</u>

<u>படிக்கவும்:</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் வேலூர் கடித எண்.ந.க.46/46148/09, நாள்.11.11.2009.
2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர் கடித எண்.வி2/27890/09, நாள்.28.01.2010.

*****

<u>**ஆணை:**</u>

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் 13, அத்தனாவூர் கிராமத்தில் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை செயலர் அவர்கள் தாவரவியல் பூங்கா அமைக்கும் பொருட்டு இடம் தேர்வு செய்ய கோரியதின் பேரில், அத்தனாவூர் கிராமத்தில் சர்வே செய்யப்படாமல் உள்ள நிலத்திற்கு நில அளவை செய்து சர்வே எண் அளிக்குமாறு சென்னை நில அளவை பதிவேடுகள் துறை முதன்மை செயலர் அவர்கள் அறிவுறுத்தியதன்பேரில், வேலூர் மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அவர்கள் மேற்கண்ட அத்தனாவூர் கிராமத்தில் நிலம் அளவை செய்யப்படாமல் உள்ள நிலத்தினை நில அளவை செய்து, இப்புலத்திற்கு சர்வே எண் 474 எனஅளிக்கப்பட்டது எனவும், இதன் மொத்த விஸ்தீரணம் 32.97.5 ஹெக்டேர் (அல்லது) 81.45 ஏக்கர் எனவும், இந்த நிலத்திற்கு புல எண் 474 என பதிவு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் 'தீர்வை ஏற்படாத தரசு' என வகைப்பாடு உள்ள 32.97.5 ஹெக்டேர் (அல்லது) 81.45 ஏக்கர் நிலத்தினை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் மூலமாக தாவரவியல் பூங்கா அமைக்க நிலமாற்றம் செய்ய கிராமத்தில் 'அ1' நோட்டீஸ் 23.10.2009 அன்று விளம்பரம் செய்யப்பட்டதில் ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை என்றும், இப்புலத்தில் மதிப்புமிக்க பலா, புளியன், கடுக்கா மரங்களும் 200 சிறிய தேக்கு செடிகளும் உள்ளதாகவும் இந்த மரங்களின் மதிப்பு ரூ.65,500/– ஆகும் என்றும் இப்புலத்தில் ஒரு ஆர்.சி.வீடும், 2 சிமெண்ட் ஷீட் வீடுகளும், 9 குடிசை வீடுகளும், 1 மங்ளூர் ஓடு வீடும் உள்ளது என்றும், மேலும் வடக்கிலிருந்து தெற்காக ஓடை செல்கிறது என்றும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் மேலும் தனதறிக்கையில், மேற்படி புலத்தில் புராதன சின்னங்கள் ஏதுமில்லை என்றும், நிலமாற்றம் செய்யப்படவுள்ள நிலத்திற்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்வதற்கு மாதிரி புலமாக தேர்வு செய்யப்பட்ட நிலத்தினை

மதிப்பு செண்ட் ஒன்றின் விலை ரூ.1587/— ஆகிறது என்றும் ஆனால் வழிகாட்டி பதிவேட்டின்படி செண்ட் ஒன்றின் மதிப்பு ரூ.1584/— ஆகிறது என்பதால் வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு குறைவாக உள்ளதால் மாதிரிபுலமதிப்பையே கணக்கில் கொண்டு 32.97.5 ஹெக்டேர் (அல்லது) 84.45 ஏக்கருக்கு மதிப்பு ரூ.129,01,680/— மேடான பகுதியில் இந்நிலம் உள்ளது எனவும், பிரஸ்தாப புலத்தில் சாகுபடி செய்தும் ஒரு சிலர் வீடுகள் கட்டியும் ஆக்கிரமணம் செய்துள்ளனர் எனவும் தெரிவித்து, மேற்படி 32.97.5 ஹெக்டேர் நிலத்தை தாவரவியல் பூங்கா அமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு வருவாய் நிலை ஆணை எண்.23ஏ—இன் கீழ் நிலமாற்றம் செய்யலாம் என பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

3. வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையை ஏற்று, முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் தனதறிக்கையில் இச்செயற்குறிப்பில் பரிசீலிக்கப்படும் நிலம் தீர்வை ஏற்படாத தரிசு (Unassessed Waste Dry) என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிப்பது சரியல்ல எனவும், அரசு அறிவிப்பின் மூலமாக இப்புலத்தை நில அளவை செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக நிலமாற்றம் விண்ணப்பம், அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதற்கான உறுதிமொழி போன்றவை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையிடமிருந்து அவரது அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் தெரிவித்து, மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களின் செயற்குறிப்பினை பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து, அதனை ஏற்று, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மதுரா அத்தனாவூர் கிராம புல எண்.477—ல் 32.97.5 ஹெக்டேர் (அல்லது) 81.45 ஏக்கர் நிலம் தாவரவியல் பூங்கா அமைக்கும்பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை என வகைபாடு செய்து, நிலக்கிரயமின்றி வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டும் மாற்றம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் வருவாய் (நிலை) ஆணை எண் 23ஏ—இன் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு நிலமாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது:—

(1) கல்கட்டணம், உட்பிரிவுக் கட்டணம் போன்ற இதரக் கட்டணங்களை கேட்புத்துறை செலுத்த வேண்டும்;

(2) அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு கேட்புத் துறை சம்மதிக்க வேண்டும்;

(3) எந்த நோக்கத்திற்காக நிலமாற்றம் செய்யப்படுகின்றதோ அதற்காக மட்டுமே அந்த நிலத்தினை பயன்படுத்த வேண்டும்; மற்றும்,

(4) எதிர்காலத்தில் மேற்கூறப்பட்ட நிலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தேவையில்லை என்றால் அதனை கேட்புத்துறை அரசு வருவாய்த் துறையிடம் திரும்ப ஒப்புவிக்க வேண்டும்.

5. மேலே பத்தி 4–இல் உள்ள ஆணையை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலாளர் (மற்றும்) நில நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்துடன் வரப்பெற்ற விசாரணை ஆவணங்கள் இத்துடன் திருப்பி அனுப்பப்படுகின்றன. அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் (மற்றும்) நில நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி.தனவேல்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**
முதன்மைச் செயலாளர் (மற்றும்) நில நிருவாக ஆணையர், சென்னை–5(இ)
மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் மாவட்டம், வேலூர்.

**நகல்**
ஊரக வளர்ச்சி (மற்றும்) பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
சுற்றுலா (மற்றும்) பண்பாட்டுத் துறை, சென்னை–9.
வருவாய் (மற்றும்) வீட்டுவசதித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர் (நிமு–2), வருவாய்த்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.